ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2254/3 - 2021 නොවැම්බර් මස 15 වැනි සඳුදා - 2021.11.15

2254/3 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்**

3(2)ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

திருத்தப்பட்டவாறான 2008ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(2)ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்ட அமுலாக்கல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இவ்வறிவித்தல் மூலம் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன்.

(1) சைனா ஹார்பர் என்ஜினியரிங் கம்பெனி லிமிட்டெட்டினால் (இதனகத்துப்பின்னர் "CHEC" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 821.6 மில்லியன் ஐ. அ. டொலர்களைக் கொண்ட எதிர்பார்க்கப்பட்ட முதலீடொன்றுடன் புதிய களனிப் பாலத்திலிருந்து ராஜகிரிய ஊடாக அதுருகிரியவுக்கான (NKBA) நான்கு சாலைவழி ஒழுங்கைகளைக் கொண்ட உயர் நெடுஞ்சாலை ஒன்றை நிர்மாணிப்பதற்கும் தொழிற்படுத்துவதற்குமான கருத்திட்டத்தை (இதனகத்துப்பின்னர் "கருத்திட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் (இதனகத்துப்பின்னர் "SDP சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நோக்கங்களுக்கான செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக அடையாளம் காண்கின்றேன். இக்கருத்திட்டம் 100 சதவீத வெளிநாட்டு நிதியளிப்புடன், வடிவமைத்தல் - கட்டுதல் - நிதியிடல் - தொழிற் படுத்தல் - பராமரித்தல் மற்றும் ஒப்படைத்தல் (DBFOMH) அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட

உள்ளதுடன், CHEC - NKBA எலிவேடட் ஹைவே (பிரைவெட்) லிமிட்டெட் எனும் கம்பனி (இதனகத்துப்பின்னர் "கருத்திட்டக் கம்பனி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இக்கருத்திட்டத்தை கட்டி, தொழிற்படுத்தி மற்றும் பராமரிக்கவுள்ளது. கருத்திட்ட நிர்மாணக் காலப்பகுதியனாது, தொடர்புடைய சலுகை உடன்படிக்கை பயனுக்குவரும் தேதியிலிருந்து மூன்றாண்டுகளாகும் (03) என்பதுடன், கருத்திட்டத் தொழிற்படுத்தல் மற்றும் பராமரித்தல் காலப்பகுதியானது நிர்மாணக் காலப்பகுதியின் பின்னரான பதினைந்து (15) ஆண்டுகளாகும். (ஒட்டுமொத்தமாக பதினெட்டு (18) ஆண்டுகள்). கருத்திட்டத்தின் தொழிற்படுத்தல் மற்றும் பராமரித்தல் காலப்பகுதி பூர்த்தியாவதன்மேல் கருத்திட்டக் கம்பனி, கருத்திட்டத்தை நெடுஞ்சாலை அமைச்சுக்குக் கையளித்தல் வேண்டும்.

(2) விலை கேட்பாளரான CHEC எனும் நிறுவனம் 1980 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டு சீனாவில் பதிவு செய்யப்பட்டது. இந்நிறுவனத்தின் வியாபாரத் தலைமையகம் சீனா பீஜிங் நகரிலுள்ள டொங் சீ மென் வை எனுமிடத்தில் அமைந்துள்ளது. இக்கம்பனி, கடல்சார் பொறியியல், வீதிகள் மற்றும் பாலங்கள், தூர்வாரல் மற்றும் பண்படுத்தல், புகையிரதப் பாதை மற்றும் விமான நிலையங்கள் போன்ற உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் நிபுணத்துவத்தைக் கொண்டுள்ள ஒரு பொறியியல் கம்பனியாகும். மேலும், கருத் திட்டத்தின் பொறியியல், கொள்வனவு மற்றும் நிர்மாணம் ஆகிய பணிகளை முன்னெடுக்கவுள்ள ஒப்பந்தக்காரராகவும் CHEC உள்ளது. CHEC, இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கத்துக்காக, அதன் தாய்க் கம்பனிக்கூடாக அல்லது அதற்கு 100 சதவீதம் சொந்தமான இணைக் கம்பனியொன்றின் ஊடாக இலங்கைச் சட்டங்களின் கீழ் உரிய முறையில் கூட்டிணைக்கப்படவுள்ள விசேட நோக்கத்துக்கான கம்பனியொன்றை தாபிக்கவுள்ளது.

(3) இக்கருத்திட்டம் வீதியமைப்புத் துறையில் பாரிய வெளிநாட்டு முதலீடுகளைக் கொண்ட ஒன்றாகும். 821.60 மில்லியன் ஐ.அ.டொலர் முதலீட்டுடனான இக்கருத்திட்டம், கருத்திட்டக் காலத்தின் போது மேற்கொள்ளப் படவுள்ள 246.50 மில்லியன் ஐ.அ.டொலர் உரிமை முதல் பங்களிப்பு மூலமும், 575.10 மில்லியன் ஐ.அ.டொலர் கடன் மூலமும் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

(4) இக்கருத்திட்டம் பின்வரும் நியதிகளையும் நிபந்தனைகளையும் நிறைவேற்றும் என்பதற்கமைய, SDP சட்டத்தின் நியதிகளின்படி இக்கருத்திட்டத்துக்கு விலக்களிப்புக்கள் வழங்கப்படுதல் வேண்டுமென வெளிப்படுத்தப்படுகின்றது.

(அ) தொடர்புடைய சலுகை உடன்படிக்கையில் தரப்பட்ட பயனுறும் தேதியிலிருந்து தொடங்குகின்ற மூன்றாண்டுகளைக் கொண்ட (03) நிர்மாணக் காலப்பகுதியின்போது குறைந்தபட்சம் 821.60 மில்லியன் ஐ.அ.டொலர் முதலீடொன்று கருத்திட்டத்தில் முதலீடு செய்யப்பட வேண்டும்.

(ஆ) பதினெட்டு (18) ஆண்டுகளைக் கொண்ட நிர்மாண மற்றும் பராமரிப்புக் காலப்பகுதியின் பின்னர் கருத்திட்டத்தை நெடுஞ்சாலை அமைச்சுக்குக் கையளித்தல் வேண்டும்.

(5) இக்கருத்திட்டமானது, கருத்திட்டக் கம்பனிக்கும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கும் இடையே உடன்பாடு காணப்பட்ட அளவுக்குறிப்பீடுகளுக்கமைய நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். நெடுஞ்சாலைகள் அமைச்சு கட்டணச் சேகரிப்பைச் செய்தல் வேண்டும்.

(6) மேற்சொல்லப்பட்ட கருத்திட்டத்தின் நோக்கங்களுக்காக, SDP சட்டத்தின் நியதிகளின்படி, இவ்வறிவித்த லுக்கான அட்டவணையில் தரப்பட்ட விலக்களிப்புக்கள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

**அட்டவணை**

**1. 2017ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்**

(அ) கூட்டிணை வருமான வரி

மூன்று (03) ஆண்டுகளைக்கொண்ட நிர்மாணக் காலப்பகுதியின்போதும், அந்த நிர்மாணக் காலப்பகுதியின் பின்னரான, பதினைந்து (15) ஆண்டுகளைக் கொண்ட தொழிற்படுத்தல் மற்றும் பராமரித்தல் காலப்பகுதியின்போதும் கருத்திட்டக் கம்பனியினால் தோற்றுவிக்கப்பட்ட இலாபமும் வருமானமும் 2017 ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழான கூட்டிணை வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

(ஆ) பங்கிலாபங்கள் மீதான வரி

பங்கிலாப வருமானத்தை பகிர்ந்தளித்தல் தொடர்பில் கருத்திட்டக் கம்பனியின் பங்குதாரர் களுக்கான பங்கிலாபங்கள் மீதான வரியானது பதினைந்து (15) ஆண்டுகளைக்கொண்ட தொழிற் படுத்தல் மற்றும் பராமரித்தல் காலப்பகுதியின் போதும் மற்றும் அதன்பின்னரான ஓராண்டு (01) காலப்பகுதியின் போதும் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(இ)) வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டி, ஆலோசகர்களுக்கான கட்டணங்கள், முகாமைத்துவக் கட்டணங்கள் மற்றும் அரசுரிமைப் பணம் (royalty) ஆகிய செலுத்துகை மீதான வரி

பின்வருவனவற்றின் மீதான பிடித்துவைத்தல் வரிச் (WHT) செலுத்துகையில் இருந்து கருத்திட்டக் கம்பனி விலக்களிக்கப்படுதல் வேண்டும் ;

i. மூலதனச் செலவினங்களுக்காக எடுக்கப்பட்ட வெளிநாட்டுக் கடன்களின் மீது;

ii. மூன்று (03) ஆண்டுகளைக்கொண்ட நிர்மாணக் காலப்பகுதியில் ஆலோசகர்களுக்குச் செலுத்தப்படும் (நாற்பது (40) ஆலோசகர்கள் வரை) கட்டணங்கள் மீதும் மற்றும் நிர்மாணக் காலப்பகுதியின் பின்னரான, பதினைந்து (15) ஆண்டுகளைக்கொண்ட பராமரிப்புக் காலப்பகுதியில் ஆலோசகர்களுக்குச் செலுத்தப்படும் (இருபது (20) ஆலோசகர்கள் வரை) கட்டணங்கள் மீதும்; அத்துடன்

iii. முகாமைத்துவக் கட்டணங்கள் மற்றும் அரசுரிமைப் பணச் செலுத்துகைகள் மீது (மூன்று (03) ஆண்டுகளைக்கொண்ட நிர்மாணக் காலப்பகுதியில் மொத்தக் கருத்திட்டச் செலவின் ஐந்து (05) சதவீதத்தை விஞ்சாமலும் அத்துடன், நிர்மாணக் காலப்பகுதியின் பின்னர், பதினைந்து (15) ஆண்டுகளைக்கொண்ட பராமரிப்புக் காலப்பகுதியில் இரண்டு (02) சதவீதத்தை விஞ்சாமலும்.

(ஈ) மூலதன ஈட்டுகைகள் மீதான வரி

மூன்று (03) ஆண்டுகளைக்கொண்ட நிர்மாணக் காலப்பகுதியின்போதும் நிர்மாணக் காலப் பகுதியின் பின்னர் பதினைந்து (15) ஆண்டுகளைக் கொண்ட தொழிற்படுத்தல் மற்றும் பராமரித்தல் காலப்பகுதியின்போதும் கருத்திட்டக் கம்பனியின் பங்குதாரர்களும் கருத்திட்டக் கம்பனியும் மூலதன ஈட்டுகைகள் மீதான வரிச் செலுத்துகையிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(உ) தொழிலின் மீதான வருமான வரி

கருத்திட்டக் கம்பனியின் வெளிநாட்டு ஊழியர்கள் (தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ நிபுணர்கள்) கருத்திட்டம் தொடர்பான தொழிலிலிருந்தான ஈட்டுகைகள் மற்றும் இலாபங்களில் இருந்து எழுகின்ற வருமான வரிச் செலுத்துகையிலிருந்து கீழே தரப்பட்டுள்ளவாறு விலக்களிக்கப் படுதல் வேண்டும் ;

i. நிர்மாணப் பணிகள் தொடங்கப்படும் தேதியிலிருந்து மூன்று (03) ஆண்டுகளைக்கொண்ட ஒரு காலப்பகுதிக்கு (அதிகபட்சமாக நாற்பது (40) வெளிநாட்டு ஊழியர்கள் என்பதற்கு அமைவாக)

ii. நிர்மாணக் காலப்பகுதியின் பின், பதினைந்து (15) ஆண்டுகளைக்கொண்ட ஒரு காலப்பகுதிக்கு (அதிகபட்சமாக இருபது (20) வெளிநாட்டு ஊழியர்கள் என்பதற்கு அமைவாக).

## 2. 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, பெறுமதி சேர் வரிச் சட்டம் (VAT சட்டம்)

மூன்று (03) ஆண்டுகளைக்கொண்ட நிர்மாணக் காலப்பகுதியின்போதும் நிர்மாணக் காலப்பகுதியின் பின்னர் பதினைந்து (15) ஆண்டுகளைக்கொண்ட தொழிற்படுத்தல் மற்றும் பராமரித்தல் காலப்பகுதியின் போதும் (இதனகத்துப்பின்னர் "BOI" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை முதலீட்டுச் சபையால் அங்கீகரிக்கப்பட்டவாறான கருத்திட்டத்துடன் தொடர்புடைய பொருட்களின் எல்லா இறக்குமதிகளும் மற்றும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகத் தேவைப்படுத்தப்படும் சேவைகளும், பெறுமதி சேர் வரிச் செலுத்துகையிலிருந்து (VAT) விலக்களிக்கப்படுதல் வேண்டும். BOI இனால் அங்கீகரிக்கப்பட்ட வாறான கருத்திட்டத்துடன் தொடர்புடைய பொருட்களின் உள்நாட்டுக் கொள்வனவுகள் மீதும், கருத்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலுக்காகத் தேவைப்படுத்தப்பட்ட சேவைகள் மீதுமான பெறுமதிசேர் வரியானது (VAT), மூன்று (03) ஆண்டுகளைக்கொண்ட நிர்மாணக் காலப்பகுதியின்போதும் நிர்மாணக் காலப்பகுதியின் பின்னர் பதினைந்து (15) ஆண்டுகளைக்கொண்ட தொழிற்படுத்தல் மற்றும் பராமரித்தல் காலப்பகுதியின்போதும் பிற்போடப்படுதல் வேண்டும்.

மேலும், சலுகை உடன்படிக்கையின் கீழ் பெறப்படற்பாலதான வட்டி வருமானம் உட்பட, கருத்திட்டக் கம்பனிக்கு இலங்கை அரசாங்கத்தினால் விதிக்கப்படும் அரையாண்டுத் தொகை சேவைக் கொடுப்பனவானது, நிர்மாணக் காலப்பகுதியின் பின்னர் பதினைந்து (15) ஆண்டுகளைக்கொண்ட தொழிற்படுத்தல் மற்றும் பராமரித்தல் காலப்பகுதியின்போது பெறுமதி சேர் வரிச் செலுத்துகையிலிருந்து (VAT) விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

## 3. 2011ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்

கருத்திட்டக் கம்பனி, (மூன்று (03) ஆண்டுகளைக்கொண்ட நிர்மாணக் காலப்பகுதியின்போதும் அத்துடன் பதினைந்து (15) ஆண்டுகளைக்கொண்ட தொழிற்படுத்தல் மற்றும் பராமரித்தல் காலப்பகுதியின் போதும் அல்லது நிர்மாணப் பணிகள் தொடங்கப்பட்ட தேதியிலிருந்து மொத்தமாக பதினெட்டு (18) ஆண்டுகளுக்கு, அதனது பெயரில் அனுப்பிவைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட BOI இனால் அங்கீகரிக்கப் பட்டவாறான கருத்திட்டத்துடன் தொடர்புடைய இறக்குமதி செய்யப்பட்ட எல்லாப் பொருட்களின் மீதும் (கருத்திட்டக் கம்பனியினால் நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டிருப்பினும் அல்லது எவரேனும் ஒப்பந்தக்காரர்(கள்) அல்லது துணை ஒப்பந்தக்காரர்(கள்) ஊடாக இறக்குமதி செய்யப்பட்டிருப்பினும்) துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டு ("PAL") விதிப்பனவிலிருந்தும் செலுத்துகையிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

## 4. 1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

கருத்திட்டக் கம்பனியின் பெயரில் அனுப்பிவைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, கருத்திட்டக் கம்பனியால் அதன் ஒப்பந்தக்காரரினால்(களினால்) அல்லது துணை ஒப்பந்தக்காரரினால்(களினால்), BOI இனால் அங்கீகரிக்கப்பட்டவாறான கருத்திட்டத்துடன் தொடர்புடைய பொருட்களின் இறக்குமதியானது, (மூன்று (03) ஆண்டுகளைக்கொண்ட நிர்மாணக் காலப்பகுதியின்போதும், நிர்மாணக் காலப்பகுதியின் பின்னர் பதினைந்து (15) ஆண்டுகளைக்கொண்ட தொழிற்படுத்தல் மற்றும் பராமரித்தல் காலப்பகுதியின்போதும் உற்பத்தித் தீர்வை விதிப்பனவிலிருந்தும் செலுத்துகையிலிருந்தும் கருத்திட்டக் கம்பனி விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

## 5. 1979ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்

கருத்திட்டக் கம்பனியின் பெயரில் அனுப்பிவைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு கருத்திட்டக் கம்பனியால், அதன் ஒப்பந்தக்காரரினால்(களினால்) அல்லது துணை ஒப்பந்தக்காரரினால்(களினால்), BOI இனால்

அங்கீகரிக்கப்பட்டவாறான கருத்திட்டத்துடன் தொடர்புடைய பொருட்களின் இறக்குமதியானது, மூன்று (03) ஆண்டுகளைக்கொண்ட நிர்மாணக் காலப்பகுதியின்போதும், நிர்மாணக் காலப்பகுதியின் பின்னர் பதினைந்து (15) ஆண்டுகளைக்கொண்ட தொழிற்படுத்தல் மற்றும் பராமரித்தல் காலப்பகுதியின்போதும் ஆயவரி (CESS) விதிப்பனவிலிருந்தும் செலுத்துகையிலிருந்தும் கருத்திட்டக் கம்பனி விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

**6. (235ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டம்**

கருத்திட்டக் கம்பனியின் பெயரில் அனுப்பிவைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, நேரடியாக கருத்திட்டக் கம்பனியினால் அல்லது அதன் எவரேனும் ஒப்பந்தக்காரரினால்(களினால்) அல்லது துணை ஒப்பந்தக்கார ரினால்(களினால்) இறக்குமதி செய்யப்பட்ட, BOI இனால் அங்கீகரிக்கப்பட்டவாறாக, (நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட ஏற்பெதிர் பொருட்பட்டியலிலுள்ள (negative list) பொருட்கள் தவிர்ந்த)கருத்திட்டத்துடன் தொடர்புடைய பொருட்களின் எல்லா இறக்குமதிகளும் மூன்று (03) ஆண்டுகளைக்கொண்ட நிர்மாணக் காலப்பகுதியின்போதும், நிர்மாணக் காலப்பகுதியின் பின்னர் பதினைந்து (15) ஆண்டுகளைக்கொண்ட தொழிற்படுத்தல் மற்றும் பராமரித்தல் காலப்பகுதியின்போதும் சுங்க இறக்குமதி தீர்வையிலிருந்து (CID) விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

எவ்வாறாயினும், ஏற்பெதிர் பொருட்பட்டியலிலுள்ள பொருட்களின் ஏதேனும் இறக்குமதியானது, ஒன்றில் அத்தகைய பொருட்கள் இலங்கையில் முற்றுமுழுதாகத் தயாரிக்கப்பட்டிராதவிடத்து அல்லது போதிய தரத்தில், அளவில் மற்றும் கருத்திட்டத்தைப் பூர்த்திசெய்வதற்கான கால வரையறையினுள் கிடைக்கத்தக்கனவாக இல்லாதிருக்குமிடத்து அவைபற்றி முதலீட்டுச் சபையினால் கவனத்திற்கொள்ளப் படுதல் வேண்டும்.

மேலும், கருத்திட்டத்தைச் செயல்படுத்துவதை விரைவுபடுத்த, அது தொடர்பான சலுகை உடன்படிக்கையில் கையெழுத்திடும் திகதிக்கும் பயன்வலுப்பெறும் திகதிக்கும் இடையே, அட்டவணையில் உள்ள காப்புவாசகம் 2 முதல் காப்புவாசகம் 6 வரையிலான ஏதேனும் இறக்குமதிகளுக்கும் இது பொருந்தும்.

**மஹிந்த ராஜபக்ஷ, பா.உ.**
பொருளாதாரக் கொள்கைகள் மற்றும்
திட்ட அமுலாக்கல் அமைச்சர்.

பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்ட அமுலாக்கல் அமைச்சு.
2021, நவெம்பர் 15.

11 - 687

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.